**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO. 110/2023**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ஆம் நாள் செவ்வாய் கிழமை

அ.சா.12 (பட்டியல் சாட்சி–12) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி.பி.மகாலெட்சுமி, பென்ச் கிளார்க் கிரேட்–2, அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மருத்துவர் காதம்பரி | த/பெ.: | பன்னீர்செல்வம் |
| கிராமம்: | வேதாரண்யம் | தாலுக்கா: | வேதாரண்யம் |
| மதம்: | இந்து | தொழில்: | மருத்துவர். அரசு பொது மருத்துவமனை வேதாரண்யம். |
| வயது: | 36 | முகவரி: | வேதாரண்யம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 17.02.2026.

**முதல் விசாரணை :–**

நான் தற்பொழுது வேதாரண்யம் அரசு பொது மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 27.10.2022–ம் தேதி திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றும் போது இரவு 08.35 மணியளவில் 45 வயது மாதாராமன் என்பவர் அன்று மாலை 06.00 மணியளவில் தன்னை சில தெரிந்த நபர்கள் தாக்கியதாக 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு கொண்டு வந்தவரை உடல் பரிசோதனை செய்தேன். அவருக்கு வலது மற்றும் இடது தோள்பட்டையில் சிராய்ப்பு காயமும், வலது கால் முட்டியில் சிராய்ப்பு காயமும், உதடுகளில் காயங்கள் ஏற்பட்டு இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக 29.10.2022–ல் அன்று திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரிக்கு அனுப்பி

வைக்கப்பட்டது. நான் பதிவு செய்த விபத்து பதிவேடு நகல் அசல் **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் அ.சா.1–ற்க்கு திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேல்சிகிச்சை பெற்று மருத்துவர் அருளரசன் என்பவர் காயம் அடைந்த மாதாராமன் என்பவருக்கு வலது கை எழும்பு மற்றும் இடது கால் எலும்புகள் முறிவுகள் ஏற்பட்டதாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயங்கள் என சான்றிதழ் அளித்துள்ளார். அந்த மருத்துவரின் பரிந்துரைப்படி அ.சா.1–ற்க்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என நான் சான்றிதழ் வழங்கினேன். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ.8** ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

பொதுவாக கயாமடைந்த நபர் சிகிச்சைக்காக மருத்துவனைக்கு வரும்போது முதலுதவி சிகிச்சை அளிக்கும் போது எத்தனை நபர்கள் தன்னை தாக்கியதாக குறிப்பிட்டு சொல்வார்கள் ஆனால் இந்த வழக்கில் எண்ணிக்கை பற்றி சொல்லவில்லை. இந்த வழக்கில் காயமடைந்த நபர் தன்னை எந்த ஆயுதத்தால் தன்னை தாக்கியதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். காயமடைந்த நபர் சம்பவம் நடந்ததாக என் விசாரணையின் பொழுது மாலை 06.00 மணிக்கு நடந்ததாக சொன்னார் என்றால் சரிதான். அ.சா.1 திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் இரவு 08.35 மணிக்கு சிகிச்சைக்காக என்னிடம் வந்தார் என்றால் சரிதான். அ.சா.1 என்னிடம் சம்பவம் நடந்த இடத்தை குறிப்பீட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1–ற்க்கு ஏற்பட்ட காயத்திற்கு உண்டான வயதை குறித்து குறிப்பிடவில்லை. அ.சா.1–ற்க்கு சிகிச்சை அளித்தற்கான நுன் கதிர் படம் மற்றும் எக்ஸ்ரே ஆகியவைகளை பார்த்தேனா என்றால் இல்லை. நுன்கதிர் படம் மற்றும் சிடி ஸ்கேன் ஆகியவற்றை மருத்துவக்கல்லூரி மருவத்துவமனையில் இருந்து மருத்துவர் அனுப்பவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சிகிச்சைக்காக 108 வாகனம் மூலமாக மருத்துவமனைக்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். யார் அழைத்து வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஒரு நபர் இருசக்கர வாகனத்திலிருந்து வேகமாக வந்து நிலை தடுமாறி கீழே விழும் போது இது போன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.